# போதிமரக் குயில்



- அம்பிகை பஞ்சலிங்கம் -

# போதிமரக்குயில்

(கவிதைத் தொகுப்பு)

செல்வி.அம்பிகை பஞ்சலிங்கம்

# நூல் விபரம்



| | |
|---|---|
| நூலின் பெயர் | : போதிமரக்குயில் |
| நூலாசிரியர் | : செல்வி அம்பிகை பஞ்சலிங்கம் *(சட்டத்துறை,நிறைவாண்டு மாணவி,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)* |
| பக்கங்கள் | : 102 பக்கங்கள் |
| பிரதி | : 500 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| முதற்பிரதி | : 2018,மாசி |
| தொடர்புகளுக்கு | : புனித செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில். முகநூல் : Ambihai Panchalingam |
| அச்சகம் | : சாயி அச்சகம், கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்( இணுவில்) தொலைபேசி :077 2209474 , 0212242042 முகநூல் : Saaji Cards மின்னஞ்சல் : saajiprinters24@gmail.com |
| நூல் வடிவமைப்பு | : பஞ்சலிங்கம் துவாரகன் |
| ISBN | : 978-955-38944-0-3 |
| விலை | : 300/= |

# கவி ஆகிய ஆக்கிய பிரபஞ்சத்திற்கு

# புனைந்துரை

நிலைபெறு கவிதையின் நியமங்களுட் தலையாயது எது?...
எனக்கேட்பின் தவிர்க்க முடியாத அதன் "நேர்மை" தான்
என்பேன் நான்.கம்பனும் வள்ளுவனும் காலம்
கடந்தமைக்கும்.அவர்க்குப் பின்னும் முன்னும் ஒரு
தொகைப்பாவலர்கள் இன்றுவரை இரசிக்கப்படுவதற்கும்
பாடு பொருள்.கற்பனை,அழகியல் என இன்ன
பிற அம்சங்கள் தாண்டி,அவர்களின் கவிதா நேர்மையே
காரணமாகியது.

அழியா இலக்கியத்தின் ஆத்மா "சத்தியம்"
கவிதை.கட்டுரை என்று அதற்கு பற்பல உடல்கள்.
யாப்பென்றும் அணியென்றும் எத்தனையோ சோடனைகள்.
சோடனையில் ஒன்றோ சிலவோ குறைந்தால் அழகு
குறையலாமே தவிர அது அழிந்ததாக அர்த்தப்படாது.
ஆனால்,சத்தியம் செத்த கவிதை சவக்கவிதை அல்லவா?

இம்மென்றால் இருநூறும் அம்மென்றால் அறுநூறும்
ஆகாதா?எனக் கேட்டு ஆயிரம் ஆயிரம் கவிதைகள்
யாத்தவர்கள் அன்றும் இருந்தார்கள் - இன்றும்
இருக்கிறார்கள் - கவனிக்கப்படாமலே
வெறுமனே வலியோரை ஆராயாது வழிமொழிதலும்.
தான் உணராத் தர்மம் தலைமேற்கொண்டெழுதலும்.
அவர்களது கவிதையில் உயிர்கொல்லிகளாகின்றன.
அதனாற்றான் இலக்கியப் பிரசவங்களில் இறந்த
குழந்தைகளையே ஈன்றபடி இருக்கிறார்கள்.ஆத்மாவே
இல்லாதது அவர் இலக்கியம் - பின் எப்படி அது
கவனிக்கப்படும்.பின் எப்படி அது காலம் கடக்கும் ?

அம்பிகையின் படைப்புக்கள் - நேர்மை என்ற இலக்கணப்பாதையில் இசைந்து நடப்பவை.சமூகத்திற்கான சமரசங்கள் அவற்றிடம் இல்லை. அந்த நேர்மையே அம்பிகையின் அத்திவாரம்.இக்கணத்தின் அனுபவத்தை, புரிதலை,ஏக்கத்தை,நம்பிக்கையை,எதிர்பார்ப்பை அவர் எப்படிப்புரிந்து கொள்கிறாரோ அப்படியே சொல்ல முயல்கிறார்.இவர் படைப்புக்களில் பல இன்னும் சிறிதே செம்மைப்படின் நிச்சயம் காலம் கடக்கும் என்பது எனது நம்பிக்கை.

தமிழ்க்கவிதை எதுகை மோனை என்ற முரட்டுத் தளைகளைத் தாண்டி வெகுகாலமாயிற்று. இவரது கவிதைகளும் கட்டற்றவை.பொருளாலும்,உருவாலும்.ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து குமரியாகிற அனுபவத்தை இவரது கவிதைகளும் அப்படியே பிரதிபலிக்கின்றன சொல் நேர்த்தியிலும் கட்டமைப்பிலும்.

காதலுணர்வுட்பட பொதுவெளியில் பெண்கள் பேசத்தலைப்படாத பலவற்றை மிக நுட்பமாக போன போக்கிலே சொல்லிச் செல்கிறார் இவர்.

மாதிரிக்கு ஒன்றிரண்டு.
"கூடு பாய்தல்" என்ற கவிதையின் - குறியீடுகளும் படிமங்களும் அப்பப்பா! ஒரு பெண்ணின் உணர்வுகளை நாகரிகமாக வெளிப்படுத்தும் விதம் அற்புதம்.

"உன் விரல்களின்
வருடல்களில் தன்
உடல் சூட்டை
உன்னுள் ஊற்றி
குளிர்ந்தே விடுகிறது
கோப்பை!"

என்று காதல் இரசத்தை அடுத்தபடிக்கு விரசமின்றி எடுத்துச்செல்லும் கவிதை

"உனக்காகவே
வடிக்கப்பட்ட கோப்பை
பிறர் தொட முயல்கையில்
விழுந்து உடைந்து
தற்கொலை பண்ணவும்
துணிந்து விட்டது!"

எனும் வரிகள் காதலியின் கற்பு நிலைபற்றிக் கதைக்கிறது. வெறும் புலம்பலாக இல்லாத ஒரு நல்ல காதல் கவிதை இது.

"சமத்துவ ஞானம்" என்ற கவிதை .புத்திசாலித்தனமான உத்திகளுடனான சமுதாயச் சாடல். "அதன் இறக்கை விரிசல்களில்.குறுகிய என் மனம்" என்ற வரிகளில் ஒரு ஈயின் இறக்கையின் விரிசலின் முன்னால் மனித மனம் எவ்வளவு குறுகியது ? எனக் காட்டிய ஒப்பீடு. சமூகத்திற்கு ஒரு அழகான சாட்டை அடி என்பேன். "புல்"என்றும்."முற்றுப்புள்ளி".என்றும் வரைவிலக்கணக் கவிதை வகையறாக்களும் நன்றே.முற்றுப்புள்ளியை "மொழியின் குட்டித்தூகக்ம்! "என்றது கருத்தான இரசனை. இன்னும் இரசிக்கவும் விமர்சிக்கவும் பலப்பல கவிதைகள் உள்ளே

வாசகனுக்கே இலக்கியம்.வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் அவரவர் அறிவிற்கேற்ற காட்சிகள் காத்திருக்கின்றன. அம்பிகையின் முயற்சி வெற்றியாகும். எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்.
ச.மணிமாறன்,
இயக்குனர்.
நொலேட்ஜ் யூனிவேரஸ்.

# என்னுரை

கவிஞன் பயன்படுத்தும் சொற்கள்
விமர்சனத்திற்குள்ளாகின்றன.அல்லது விமர்சிக்கப்பட
வேண்டுமென்பதற்காகவே சொற்களைச்சுதந்திரமாக
உபயோகிக்கின்றான்.தம் நயப்பு மிகுதியால்
சொற்களைப்புனைந்தும் கொள்கின்றான்.
உயர்வு அல்லாத பொருட்களை இமைப்பொழுதில்
அதியுன்னத அந்தஸ்துடையனவாக மாற்றிவிடவும்
உயர்வான பொருட்களை கடுகதியில் மதிப்பற்ற
பொருட்களாயும் அவனால் மாற்றிக்கொள்ள முடிகிறது.
இந்த இடங்களில் கவிஞன் தன்சார்ந்த
பொருட்களுக்காக ரசனை மிகுந்த வக்கீலாகவும்
மாறிவிடுகின்றான்.
நூலைப்பற்றிய தன்னுடைய பார்வையை கவிஞன்
பதிவுசெய்கின்ற போது அது தேவையற்ற
விவாதங்களைக் குறைக்கும் அதேவேளை அது
வாசகர்களின் எண்ண வாகனத்தின
இயந்திரத்தைக்கோளாறு ஆக்கிவிடும் என்கின்ற
அச்சமும் என்னிடம் புரையோடித்தான் இருக்கின்றது.

"மரத்தை, "வெறுமனே மரத்துப்போதல்" அல்லது
"நீட்டோலை வாசியானே நன்மரம்" என்ற
விவாதங்களைத்தாண்டியும் ஞானத்தை வழங்கும்
ஒரு அட்சயபாத்திரமாகவே என்னால் பார்க்கமுடிகிறது".
மணிவாசகரை ஆட்சிசெய்ய குருந்தமர நிழலையும்
நால்வேத உட்பொருளை நான் முனிகளுக்கு
அளித்திட கல்லாலமரத்தையும்
கடவுளே தேர்ந்தெடுக்கின்றார்.

புத்தபிரானின் ஞானக்கண்ணைத்திறப்பதற்கு
போதிமரம் தன்னைத்தயார்ப்படுத்தி வைத்திருக்கின்றது.
ஆக மரங்கள் ஞான நிலையடைந்து
ஓரிடத்தில் நிலைத்துநிற்பவை.
போதிமரம் புத்தனுக்கு மாத்திரம்தான
ஞானம் வழங்கியிருக்குமென்றால்
அது புத்தரின் சாதுர்யம்!
இல்லை போதிமரம் அனைத்து உயிர்கட்கும் ஞானம்
வழங்கும் தன்மை உடைத்தது என்றால்
அதுமரத்தின் சாணக்கியம்!
அப்படியாயின் அங்கிருக்கும்
குயிலுக்கு என்ன நிகழ்ந்தது?ஆழ்ந்து அமைதியாய
அமர்ந்த புத்தனுக்கு மாத்திரமா அல்லது
அப்பப்போது வந்துபோகும் குயிலுக்கும் ஞானம்
கிடைத்ததா? என்பதை அது கூவிய கவி வரிகளிலிருந்து
வாசகர்கள் உணர்ந்து கொள்ளட்டும்.
சீடர்கள் பல திறத்தவர்களாகையால் குருவின்
போதனையை உணராத குயில் பலவேளைகளில்
தவறான இசைமெட்டிலும் குரலெழுப்பிக்
கூவியிருக்கின்றது. குழந்தைகளின் அழுகை
சிலவேளைகளில் தாளக்கட்டுக்குள் அகப்படுவதுபோல
தோன்றுவதாய் இந்தக்குயிலின் கவிக்கூவுதல்களும்
சிலவேளைகளில் விரும்பத்தக்கதாயும் அமைந்துதான்
இருக்கின்றன. குயிலின் இசைலயத்தில்
மூழ்கித்திளைக்கும் உலகம்தான் அதனை
கூடுகட்டத்தெரியாத நலிந்த பறவையாகப்பார்த்து
ஏளனமும் செய்கிறது.

ஆனால் நிலையாமையை
உணர்ந்து தனக்கென்று எந்தச்சொத்துக்களையும்
தேடாமல் ஞானத்தின் அதியுச்சநிலையை
அடைந்துவிட்டதாகவே கவிஞன்
குயிலைக்கொண்டாடுகின்றான். பார்ப்போம்:
இனிக்குயிலின் கூவுதல்களையும்
அதன் மொழிகளையும்.

அன்பான விமர்சனங்களுக்காகவும்
ஆக்கபூர்வமான கருத்துக்களுக்காகவும்
காத்திருக்கும்,
அம்பிகை.ப

நன்றிகள்,

ஒ:எனக்காக தூக்கம் தொலைத்த அம்மா,அப்பா,தம்பி!

ஒ:கவிதைகளைச் செம்மைப்படுத்தித் தலைப்பிட்ட
கவிஞர் ச.மணிமாறன்!

ஒ:வாழ்த்துரை வழங்கிய முனைவர் வே.த.யோகநாதன்!

ஒ:புத்தகப்பக்கங்களை ஓவியத்தால் நிறைக்க
வழிகாட்டிய சட்டத்துறை விரிவுரையாளர்,
ராஜசிங்கம் சஞ்சஜன்!

ஒ:சர்வதேசத்தரப்படுத்தல் இலக்கம் பெற்றுக்
கொள்வதற்கு உதவிபுரிந்த நூலகர் அனிதா,
அஜந்தன், அதிபர் ஜெயக்குமார்!

ஒ:சாயி அச்சகம்!

ஒ:கவிதைகளை தட்டச்சுச்செய்த கணினிக்கல்லூரி!

ஒ:நண்பர்கள்!

ஒ:உறவுகள்!

ஒ:யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்!

ஒ:எல்லாமுமாகிய கடவுள்!

# குயிற்கூவல்கள்

யாரிவள்?
முற்றுப்புள்ளி
சகவாசதோஷம்
நாட்சவாரி
குங்குமத்தீட்டு
காதல் குயவன்
சொல் நிலவே
ஞானவயல்
அயர்ப்பு
பிரம்மக்கிறுக்கல்
வாழ்கணக்கு
ஆயிரம் ஏக்கர் அகதிகள்
காதலாகிக்கசிந்து
சமத்துவஞானம்
ஆதலால் காதல்செய்வீர்
புல்
புருஷலட்சணம்
என் முகவரி : நம்பிக்கை
சடங்கு
நீ + நான் = ஏக்கம்
ஓசைக்கவி
காதல்க்கணக்கு
காலை மகிழ்தல்
கூடு பாய்தல்
நட்பிலக்கணம்
வெட்கம் அறிதல்
யுகப்போர்
போதிமரவிறகு
பொந்திடை வைத்திட்ட
நொடி
ஞானதரிசனம்

# யாரிவள்?

மழைக்காலங்களில்
குடையைவிட வானவில்லையே தேடுகிறவள்!
வானமுகடு ஏறி
நட்சத்திரங்களை ஒழுங்காக்குவதில் பிரியப்படுபவள்!
பால்வீதிகளில்
பூமியின் பூக்கள் நட்டுவைக்க நாட்டமுடையவள்!
கோள்களின்
தூசுதட்டி கோலத்தின் புள்ளியாக்குபவள்!
வண்ணத்துப் பூச்சிகளின் அசைவிலும்
வடிவான மரங்களின் துளிரிலும்
தன்னை இழப்பவள்!
எங்கோ
அலையும் - எறும்புகளுக்கும்
உணவுகிடைத்திருக்குமோ என
குழந்தைக்கதை பேசுபவள்!
சுற்றித்திரியும் தேனீக்களுக்கு - இறைவன்
பூவுக்குள் தேனொளித்து வைத்துள்ளான் என
சேதி அனுப்புபவள்!
ஆறேழு கோழிக்குஞ்சுகளை
கூட்டுச்சேர்த்து கூடி மகிழ்பவள்!

ஐயையோ!

பல்லிகள் பசிக்கிறது என்றுதான்

சொல்கின்றனவா என்று

பதறிக் கொள்பவள்!

சின்னக்குருவிகளின் பாட்டில்

மனதைத்தொலைத்து காற்றலைகளில்

தேடுபவள்!

முயல்களின் அசைவு, குயில்களின் இசைவு,

இவைகளில் காலம் மறப்பவள்!

வானம் ஏன் நீலம்? கிளி ஏன் பச்சை? என

தர்க்கம் தாண்டிச் சிந்திப்பவள்

விடையின்றித்தவிப்பவள்!

# முற்றுப்புள்ளி

பேனாவின் கண்ணீர்த்துளி!
எழுத்துக்களின் துப்பல்!
பேனா காகிதத்திற்கு கொடுத்த இறுதி முத்தம்!
பல லட்சலட்சோப பற்றீரியாக்களின் கூட்டு!
எழுத்துக்களின் ஓய்வறை!
சின்னப்பூமி!
உலக வரைபடத்தில் இலங்கை!
எழுத்துக்களுக்கு கட்டுப்பாடு! சிறை! தடுப்புச்சட்டம்!
தன்னடக்கம்!
விதவையாகாத காகிதம்!
கவிதைக்கு கழிக்கும் திருஷ்டி!
வசனங்கள் தமக்குத்தாமே
போட்டுக்கொள்ளும் பாதுகாப்புக்கவசம்!
ஓசோனது ஓட்டை!
காகிதத்தின் மச்சம்!
அடுத்ததற்கான ஆரம்பம் இன்னொன்றிற்கான முடிவு!
பெரிய வேற்றுமைவாதி!
அடங்காத எழுத்துக்களின் அணைக்கட்டு!
மொழியின் குட்டித்தூக்கம்!

## சகவாசதோஷம்

புல்லுக்குள்
விழுந்த நெல்லுமணிநான்!
என் ஆடைகளை விலக்கி
போர்வை விலங்குகளை
உடைத்தெறிந்தும்
முடியவில்லை
வெளியில்வர,

மேகங்கள்
என் காயங்களுக்கு
நீர் வார்க்க
நிம்மதியடைந்தேன்,
நிற்கவில்லை நான்!
மீண்டும் முயற்சி!
அப்பா!
வெளியில்
வந்தாச்சு!

இப்போ
மண்ணின் படையெடுப்பு!
என் வெற்றியைத்தள்ளிப்போட
எத்தனை எத்தனை எதிர்ப்புக்கள்?

நான் மண்ணிற்காக போராடவில்லை,
மண்ணோடு போராடினேன்!
காய்ந்துபோன கரிசல்
விரிசலாக்கியது
என் முன்னேற்றத்தை!

எத்தனை
முட்டுக்கட்டைகள்?
இத்தனைக்குமிடையில்
முளையாய் முளைத்தேன்!
என் வியர்வையே
எனக்கு உரமாக..

கொஞ்சம் தலைநீட்டி
கோடி அழகை
இரசித்தேன்!

மேகத்திடம் கெஞ்சினேன்,
என் மேனியை நனைக்கச்சொல்லி,
அதன்
மோகம் முடிந்ததுவோ?
போகம் முடிந்ததுவோ?
எனக்கு
யோகமில்லையோ?
தெரியவில்லை.

வாடும் பயிரெனக்கு
வார்க்க மறந்தன
மேகங்கள்!
வளையவில்லை நான்,
வாடியிருந்தும்
வாஞ்சையிழக்காமல்
வலிகளைப் பொறுத்தேன்!

என் புது நண்பர்கள்
ஏதோ பேசுகிறார்கள்
பூகம்பமானது என் காதில்
புல்லுண்ணிகள் வரப்போகிறதாம்?

நானென்ன புல்லனா?
என்ன?
ஆனால்
அவைக்குத் தெரியுமா?

ஐயோ!
காலன்
என் கண்ணருகே!
அருகிருந்தவர்
அழிந்து கொண்டிருக்கிறார்கள்!
அரக்க கண்களில்
அகப்பட்டேன்
நானும்!

காமவெறியர்கள்
கசக்கிப்பிழிந்தார்கள் என்னை!
நான் கண்ட
உலகம் மறைந்து விட்டது!

ஓசைகள் அழிந்து விட்டன!
ஒன்றுமே தெரியவில்லை!

இப்போது
வானம் ஏன்
அழுகிறதோ?
புரியவில்லை!

# நாட்கவரி

அதிகாலை " ஆறுமணிக்கெல்லாம்"
விழித்துக்கொள்கிறேன்!

அதன் முன்னம்
பாடித்திரிந்த பறவைக்கானங்கள்
காதுக்குள் நுழைந்த ஞாபகமில்லை!

குழாய்நீர்க்குளியல் கழுவல்!
நதிநீரில் எனை நனைக்க
விதி விடவில்லை!

அவசரச்சமையல்
"அதிரடி உணவுகள்"
பாவம் - அவைகட்கும் வியாதிகளாக்கும்!
மருந்தை உட்கொண்டுவிட்டே
எமக்குணவாகும் - "உடன்காய்கனிகள்"!

தாத்தா நட்ட மாமரத்தை
தறித்து விட்டுத்தானே
தடல்புடலாய் - செயற்கைத்
தாமரைத்தடாகம்!
கார்வண்டி!
காப்பெட்டு வீதி!
கரையோரப் புல்வெளிப்பூக்களை
பூச்சிகள் கவனித்துக் கொள்ளட்டும்!

எங்கோ தெரியும்
சிட்டுக்குருவியை
சிக்னல் லைற்றுக்கள்
மறைத்துக் கொள்கின்றன!

இப்போதெல்லாம்
என் கண்கள்
இரசனையை விட
பாதுகாப்புக்கே முக்கியத்துவம்
கொடுக்கிறன!

அலுவலகம்!
மதில்வாயைத்திறக்கும்
மனித இயந்திரம்!
இயந்திரத்தோடு என்ன
பல்லிளிப்பு?

நேரசூசி வேலை!
அட்டவணையில்
புன்னகைக்கு பொழுது ஒதுக்கப்படவில்லை!
கடிகாரம்
கச்சிதமாய் மணிகாட்ட
பத்துநிமிடத்துள்
பறந்தாகிவிட்டது வீட்டுக்கு!

பழைய இரவு!
உணவு!
தொடுதிரை-தொலைதிரை
ஆக்கிரமிப்புப்படலம்!
தூக்கம்!
இடையில் - சுவாசித்ததாய்
சாதுவான ஞாபகம்!

## குங்குமத்தீட்டு

தலைகுளித்து ஈரம் முடி நுனியில் சொட்ட
அலுமாரியில் கைநுழைத்து
எதையோ தடவிக்கொண்டிருந்தாள்!

வாழ்க்கை நீரினால்
கழுவித்துடைத்தெறியப்பட்ட
குங்குமச்சிமிழ் கைப்பட
விசுக்கென்று கையெடுத்து அவள்
கொஞ்சம் சுதாகரித்து
விரக்தியுடன் தொட்டுப்பார்த்தாள்..

குங்குமம்,
அது ஒரு நிறம்!
பிரசாதம்!
சமயக்குறியீடு!
கலாசாரக்காவலாளி!
கோபவர்ணத்தின் குறியீட்டுப்படிமம்!
குமரிப்பெண்ணின் முதலாவது வெட்கம்!
இத்துடன் நின்று விடாமல்
அவள் போன்றோரின் நிரந்தர எதிரி!

அந்த " நிறத்தை "
தூரவைத்து
நிறமற்ற புடைவை
நேர்த்தியின்றி அவள்
உடலை
நெய்து கொண்டது!

தேநீரை உதட்டில் படாமல்
உறிஞ்சிக் கொள்கிறாள்!
ஈரச்சிரசுக்கு அவள்
கணகணப்பைத்தேடவில்லை!
காலை இது போதுமென
புலம்பிக் கொள்கிறாள்.

வெளிக்கிடும் போது
காலை அவளைச் சகுனம் பார்க்கிறது!
சூரியன் புலர்வதுதான் ஆச்சரியம்!

சாலைகளை சரளமின்றி கடந்து
சார்ந்தவரின் சந்தேகங்களை களைந்து
எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறாள்!

இரவுகளின் பேய் நாக்குகள்,
தென்றலின் அகோர முத்தங்கள்,
தூறலின் கோபத்தீண்டல்கள்,
வசந்தகாலத்தின் வேண்டாத வருகைகள்,
இவளைச் சுவைக்கின்றன.
பூக்கள் கூட வெறுப்பது
இவளைத்தானே!

அவள்
ஈரச்சிரசுக்கு கணகணப்பைத் தேடவில்லை
துவட்டவும் பிரியப்படவில்லை!

சாலைகளை சரளமின்றி கடந்து
சார்ந்தவரின் சந்தேகங்களை களைந்து
எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறாள்!

## காதல்க்குயவன்

எனைக்காதலி செய்தவனே!
விரக விரல்கள் எனைத்தீண்டாமல்
விழியோரம் காதல் தந்தவனே?

உன் நட்சத்திரமுத்தங்கள்
என்
தாமரைக் கண்களை
கூம்ப வைக்கின்றன!

கண்ணீர்க்குடமுடையும் கணங்களில்
காதல்க்குயவனாய் கசிவடைக்கிறாய்!

கணிச பொழுதுகளில்
கணவனைத் தொலைத்து
கடவுளைப்பார்க்கிறேன்
உன்னில்!

அம்பிகை.ப

சேமித்து வைத்த
செல்லச்சிணுங்கல்கள்
உன்னோடு
செலவாகிப்போக,
கோடிகளுக்கு அரசி ஆகிறேன்.

மறைத்து வந்த
வெட்க முடிச்சுக்களை
மெல்ல அவிழ்த்து
உன் வெட்கங்களையும்
அதனுள் பூட்டி வைக்கின்றாய்!

தாலாட்டும் என்னை
குழந்தையாக்கி
தவறுகளை
இரசிக்கத்துவங்கினாய்!

அன்பு நெய்தடவி

வளர்த்துவிட்ட

கூந்தலாய் ஆனதே நம் உறவு!

உன்

காதலளவு

குழந்தைகள் பெற்றுக் கொண்டால்

என்னவாகும் - பூமி?

# சொல் நிலவே?

யாரந்த
அந்தரங்கக்கவிஞன்
உனை
ஆத்மார்த்தமாக அழைத்தது?

எந்த மழலை
மொழிகேட்டு
ஏறிவந்தாய் மலை மீது?

நாம் வான் பார்க்க மறந்ததால்
நிலம் பார்க்க வந்தனையோ?

ரசிக்கப்படாத இரவுகளில்
புதுமை சேரத்து
எத்தனையாவது பதிப்பில் வந்தாய்?

குறுகும் பார்வையை செப்பனிட்டு
விசாலம் செய்ய
பூமியின்
விலாசத்தில் வந்தனையோ?

ஏன் உன்
நட்சத்திரக்குழந்தைகளுடன்
ஏதும் கோபமா?
இல்லை
பூமிக்காதலனிடம் புது
மோகமா?
ஏனை கொழுந்திமார் ஏதும்
கோள்மூட்டி விட்டனரா?

உண்மையைச் சொல்!
தினமுனை ரசித்து
தேயும் போதெல்லாம் தவித்து
வாரா நாட்களில் வாடித்துடிக்கும்
என் விழி காணத்தானே
வந்தாய்?

எப்படி இருந்தாலும் வா!
பூமியின் பிரதிநிதியாய் உனை
நான் வரவேற்கிறேன்!

உன் வெளிச்சத்தில்
நகைபோடும் நதிகள் இலைகளிடம்
நிதி வேண்டிப்போ!

திருடர்கள்
உனைப்பார்த்து
திடுக்கிட்டுப்போகட்டும்!

உன் வருகையால்
மலரும் வாடும் மலர்களுண்டு
உணர்ந்துபோ!

பார்த்துப்போ
பூமிதனை
காத்துநில்!

கண்ணகிக்கு கதிரோன்
என்னவர்க்கு நீதானே!
கொடிய இரவுகளில்
பொசுக்கப்பட்ட உயிர்களுக்காக
ஏதும் சாட்சி சொல்ல
வந்தனையோ?

நீதி மன்றங்களுக்கு மட்டுமல்ல
நீதிக்கும் இரவில்
வேலையில்லை!
இனி நீ 2034 இல் வந்தால்
போதும்
அதுவரை இழுபடுவதுதானே வழக்கு!

(2016 இல் சுப்பர்நிலா வானில் தோன்றியபோது,
2016 ஐப்பசியில் இரவு படுகொலை செய்யப்பட்ட
பல்கலைக்கழகநண்பர்கள் சுலக்ஸன், கஜன்
ஆகியோருக்கு அர்ப்பணம் செய்து ஆக்கப்பட்டது)

## ஞானவியல்

இப்போதெல்லாம்
கூட்டத்தில் தனிமையையும்
தனிமையை கூட்டமாயும்
என்னால்
உணர முடிகிறது!

எனக்கானதல்ல என்று
சுயநலமில்லாமல் நான் தவறவிட்டவைகள்
இன்று
எனைப் பரிதாபமாக பார்க்கின்றன!

பானையைத்துளாவி
சோர்ந்து போய்
வெறும் கைகளோடு திரும்பும்
அகப்பைகளாய் என் அனுபவங்கள்!

நலிந்தவள் என்று தெரிந்தும்
நிராயுத பாணிகளைத் தாக்கும்
விதித்துப்பாக்கிகள்!

வயது தந்த உயிர்நோவு இன்னும் கொல்ல
எனக்கான திரைப்பெட்டியின்
றிமோட்டை கையாளும்
குழந்தைக் கடவுள்!

நான் என்னோடு அழுது
அடுத்தவரோடு சிரிப்பதை
கோபமாய் நினைக்கும்
என் கண்கள்!

என்னுடன் கூட இருக்கும்
நாளைய பிணங்கள்
இன்று என்னை அலங்கரிப்பதிலும்
அழகாக்குவதிலும்
பெரிதாய் அலட்டிக்கொள்கின்றன!

என்னை விரும்புவதற்கு
எந்தக் காரணமும்
எத்துப்படவில்லை
வாழ்க்கைக்கு!
அது நன்றாகத்தான்
போய்க்கொண்டிருக்கிறது..
எனது உடலை இழுத்துக்கொண்டு
எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது!

நான்
ஆசைப்பட்டுத் தோற்றுப் போனவையிடம்
என்
மனதை நிரந்தரமாய்
வைப்பிலிட்டு விட்டு
நானும் வாழ்க்கையுடன்
போய்க்கொண்டு இருக்கிறேன்!

அது
எனது உடலை இழுத்துக்கொண்டு
எங்கேயோ போய்க்கொண்டு
இருக்கின்றது!

# அயற்ப்பு

விண்ணுயர வளர்கிறது
என் சோம்பல் மரம்!

இடைக்கிடை
நித்திரை மொட்டுக்கள்
கொட்டாவிப்பூக்கள்!
உதிர்ந்து விழும்
உற்சாக இலைகள்!
*பஞ்சித்தளிர்கள் ! அதற்குதவும்
பசிச்சரங்கள்!
பெருமூச்சுத் தென்றல்!

விண்ணுயர வளர்கிறது
என் சோம்பல் மரம்!

மரத்தை வலுப்படுத்தும்
மந்தகதித் தண்டுகள்!
விழுதுகளாய்த் தாங்கும்
விழி அயர்ப்புகள்!
வேராய்த் தொழில் செய்ய
வேதனைச் சீவல்கள்!

விண்ணுயர வளர்கிறது என் சோம்பல்மரம்!

மரத்தில் தங்கும்
மறதிக்குருவிகள்!
உரசிப்போகும்
உளறல் நிஜங்கள்!
ஆற அமர இருக்கும்
அருவருப்புக் கிழடுகள்!

ஆடி ஓடித்திரியும்
அரிவரி அலுப்புக்கள்!
மலடான சுவாரஸ்யம்
மலராத மகிழ்ச்சி!
இன்னுமின்னும் பக்க வேர்களில்
ஒட்டியிருக்க
விண்ணுயர வளர்கிறது என் சோம்பல்மரம்!

ஏலாமைக்காய்கள் - எழுச்சி அழிக்கும் பழங்கள்!
நெட்டி முறித்தல்கள்
கொஞ்சம் நீரை வார்க்க
விண்ணுயர வளர்கிறது
என் சோம்பல் மரம்!

* சோம்பலைக் குறிக்கும் யாழ்ப்பாணப் பிரதேசவழக்குச்சொல்

# பிரம்மக்கிறுக்கல்கள்

இறைவனின் எழுத்துப்பிழைகள்!
தலைப்பில்லாத கவிதைகள்!
பூக்காத ரோஜாமரம்!
கிழிக்கப்பட்ட புத்தகம்!
நிறைவுறா ஓவியம்!
பல்லவியில்லாப்பாடல்!
கோவிலில்லாக்கடவுள்!
ஆசிரியரில்லா வகுப்பறை!
வாழ்க்கை தந்த பாடம்!
பாடமாய் வந்த வாழ்க்கை!
கிறுக்கப்பட்ட இறுவெட்டு!
கடவுளின் வியாழமாற்றம்!
வழக்குகளில் ம(று)றக்கப்படும் சட்டம்!
ஓவியனின் சிந்தனைச்சிதறல்!
ஆண்டவனின் அவசரம் , கவனக்குறைவு!
பிரமனின் ஒத்திகைக்களம்!

## வாழ்கணக்கு

பிரிவு அழகு,
பிரிதலே வாழ்க்கை,
பிரிவு வேண்டும்!
அது
புரிந்தால் அழகு!

உலகில் பிரியாதது எது?
பூமியையே தட்டுக்கள் பிரிக்கவில்லையா?
கலங்களுக்கு கூட தடுப்புச்சுவர்
கட்டப்படவில்லையா!?

கவலைகளின் பிரிவு கண்ணீர்!
மையின் பிரிவு எழுத்து!
உதட்டுப்பிரிவு வார்த்தை!
இமைகளின் பிரிவு உலகம்.!
விரல்களின் பிரிவு செய்கை!
கருப்பிரிவு உன் பிறப்பு!
உயிர்ப்பிரிவு உன் இறப்பு!

வெப்பப்பிரிகைதானே உணவை
அவிக்கின்றது!
நீரின் பிரிகை மேகம்!
மேகப்பிரிகை மழை!
எச் ரூ ஓ ..
அப்பப்பா ..

உடலிலிருந்து உழைப்பைப்பிரி ஊதியம்!
ஊதியத்தை பிரி செலவு!
செலவைப்பிரி வரவு!

நிலவின் பிரிவு காலை!
இரவியின் பிரிவு இரவு!
புத்தகத்தைப்பிரி அது அறிவு!
செய்யுளைப்பிரி அது தெளிவு!

தாயின் பிரிவு தன்னம்பிக்கை!
தந்தையின் பிரிவு தத்துவம்!
அன்பின் பிரிவு அனுபவம்!
அனைத்தையும் பிரி அது சுகம்!

பிரிதலே ஞானம்!
அணு என்பது என்ன?

ஒவ்வொரு கணமும் தேவையற்ற செல்கள்
எம்மைவிட்டு
பிரிகின்றதாமே?

மொட்டுக்களின் பிரிகைதானே சுகந்தம்!
பிரிதலாலே உலகு அழகாக,
நண்பி!
உன் பிரிவு மட்டும் என்னை
என்ன செய்து விடப்போகிறது?

(விசுவமடு செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிட்ட
"1000 கவிஞர்கள்.கவிதைகள்"
நூலில் இடம்பெற்ற கவிதை)

# ஆயிரம் ஏக்கர் அகதிகள்

கண்ணீருடன் கடந்து போகும் சாலைகள்!
வலிகள்
வடலிகளாய் முளைக்க
உங்கள் சதைகள் இரத்தத்தாலான
வீதிகளில்
சங்கடமாய் பயணிக்கின்றோம்
புற்கள் ஒவ்வொன்றிலும் - உங்கள்
பற்கள் பூத்து நிற்க
கொஞ்சம் நிம்மதியடைகிறோம்.

ஆயிரமாயிரம் ஏக்கருடன்
அகதியாய் நிற்கும்
எம்மவர் நோக்கி இனிப்பயணிப்போம்
கண்ணீருடன் கடந்து போகும் சாலைகள்..

கோயில் அத்திவாரத்தில் கட்டப்பட்ட விகாரைகள்!
விண்ணைத்தொடும் ரவர்கள்!
விளம்பரப்பலகைகள்!
புகையிரதக் கடவைகள்!
கொஞ்சம் துளிர்க்கும் மரங்கள்!

கவிதைக்கு வரிதரும் கட்டறுந்த வீடுகள்!
கருகிய காடு சுத்தும் சிட்டுக்குருவிகள்!
கண்பிதுக்கும் சிறார்கள்!
பாறி விழுந்த பசு மரங்கள்!

சத்தமில்லா சந்தைகள்!
சாமியில்லா கோயில்கள்!
நம்பிக்கையிழக்கா தேவாலயங்கள்!

மரமறைவுக்குள் குடில்கள்!
மரித்தெழுந்த மனிதர்கள்!
மகிழ்கனாக்காணும் மயில்கள்!
கவிஞனின் முதல் கவிதையாய்ப்போன ஊர்கள்!

வலிகள் வடலியாய் முளைக்க
உங்கள் சதைகள் இரத்தத்தால் ஆன பாதையில்
சங்கடமாய்ப் பயணிக்கின்றோம்!

## காதலாகிக் கசிந்து

நீ உன்னையும்
நான் என்னையும் அழைத்துக்கொண்டு
நாம் எங்களைச் சந்தித்தோம்!

என் சரணங்கள்
உன் பல்லவியால்
பூரணமாயின!

என் மலருக்குள்
நீ வாசத்தை ஊற்றினாய்!

என் மன வெளிக்கு
சிறகுபூட்டி
விண்வெளிக்கு அனுப்பினாய்!
நிறமற்ற
என் நகங்களில்
உன் ஸ்பரிசம்
வெட்கச்சிவப்பைப்
பூசிச் சென்றது!

என்
கூந்தல் கலைக்கும்
காற்றைக்
கூப்பிட்டு அதட்டிவிட்டாய்!

உனைக்காணும்போதெல்லாம்
கவிழ்ந்து விடும்
கண்களில்
காதல் பதிவைத்தாய்!

என் சிணுங்கல்களைக்
கோர்த்து
வானவில் பண்ணினாய்!
என் உதட்டுப்பூக்களை
உன் பட்டாம் பூச்சி இதழ்களைச்
சுற்றி அலைய விட்டாய்!

இத்தனையும் பண்ணிவிட்டு
இறுதியில்
அத்தனையும்
கனவு என்றாய் .?

## அமத்துவரானம்

நிச்சயமாய் எனக்குப்பிடிக்கவில்லை!

அந்த

ஙொய் சத்தம்!

ஆத்திர மேலீட்டால்

அடித்தே கொல்லத் தோன்றுகிறது!

நிச்சயமாய் எனக்குப்பிடிக்கவில்லை

அந்த

ஙொய் சத்தம்!

அட

கோயிலுக்குள் நிற்கிறோம்

என்று

கொஞ்சமும் நிதானிக்காமல்

இரையும் அதை

யார்தான்

இரசித்துப் பார்ப்பார்?

முகத்தில்
அரியண்டமாய் முந்நூறு
முத்தமிட்டு அது செல்கிறது!
பிடிக்கப்போன
விரல்களால் என்முகம் தான்
பிறாண்டப்படுகிறது!

நிச்சயமாய் எனக்குப்பிடிக்கவில்லை
அந்த ஙொய் சத்தம்!

வீதிகளின்
விளையாட்டுச்சிறாரின்
சளி வாசனையை நுகர்ந்து திரிந்த
உன்னை
சந்நிதிக்குள் அனுமதித்தது யார்?
வினா என்னை வினவுகின்றது!

அது அது அந்த அந்த இடத்தில்
இருக்க வேண்டும்!

நிச்சயமாய் எனக்குப்பிடிக்கவில்லை
அந்த ஙொய் சத்தம்!

அருகிருந்த குழப்படியின் அழுகிய
சிதல்களை நக்கிவிட்டு அப்படியே
அந்தணன் மடியிலே
அநாயாசமாய் உட்காருகிறது!

அச்சோஓ!
பக்தகோடிகளின்
பாதச்சலவை நீரில்
மூழ்கித்திமிறி விட்டு
அப்படியே பால் பழம் பஞ்சாமிரதத்திலும்
படுத்துக் கொள்கிறது!

குப்பை மேட்டு ராஜாவுக்கு
கோபுரத்தில் என்ன வேலை?
வெட்டி விடவே தோன்றுகிறது!

அதுவோ

தன்

முன்னம் பின்னங்கால்களை

வெகுவாக உரசி

என்னுடன்

மல்லுக்கட்டத்தயாராகிறது!

பிழைத்துப்போ!

ஈக்களுடன்

பூக்கள் ஏன் மோதுவான் என

சினமடக்கினேன்!

நிச்சயமாய் எனக்குப்பிடிக்கவில்லை

அந்த ஙொய் சத்தம்!

நான் சற்றும்
எதிர்பாராதகணம்!
பிறப்பால் ஒத்து பின்னணியால் வேறுபட்டு
எங்கோ ஓர் மூலையில்
நசிந்து கை பிணைந்து
முடங்கிக் குடங்கிக் கொண்டிருந்த
ஒருவனை
அது
அன்பாய் முத்தமிட்டு
அப்படியே என்னைத்தாண்டி
ஆண்டவன் சொரூபத்தில்
போய் அமர்ந்தது!?
!??!!???!!!

அதன் இறக்கை விரிசல்களில்
குறுகிய என் மனம்
தலை குனிந்தே போனது!

# ஆதலால் காதல் செய்வீர்!

காதலி!
தேடித்தொலைந்துபோ!
தொலைந்து மீண்டும்வா!
அழுது கொண்டே சிரி!
சிரித்துக் கொண்டே அழு!
காலம் மறந்து நில்!
கருமத்தில் கருமி செய்!

பெற்றோரை இகழ்வாய்!
பெரியோரை நினைக்காய்!
பறவைகளை நலம் கேட்பாய்!
பட்டாம் பூச்சிகளாய்ப் பறப்பாய்!

பாதங்களில் சில்லுப்பூட்டுவாய்!
சிறகுகளைச் செப்பனிடுவாய்!
கண்களால் பேசப்பழகுவாய்!
கைகளால் பார்க்கப்பழகுவாய்!

உறவெல்லாம் சுமையாகும்!
உன்னவள் பெயர் சுவையாகும்!
உலகம் காகிதமாகும்!
உதிரம் காவியமாகும்!

மோனம் உன் மொழியாகும்!
மோகம் உனக்கான உளியாகும்!

கற்றல் மறப்பாய்!
சுற்றம் துறப்பாய்!
சுவாசித்துக் கொண்டே இறப்பாய்!

காதலி!
தேடித்தொலைந்து போ!
தொலைந்து மீண்டும் வா!

## புல்

வானம் அழுததால்
அதன் காதலை ஏற்று பூமி காட்டும் பச்சைக்கொடி!
பூமியில் நட்டுவைத்த வால் நட்சத்திரம்!
மண்ணின் கூந்தல் கீற்று!

நிலத்தின் மோகக்குறி!
உலகின் அரும்பு மீசை!
வானில் நின்று விழுந்துறைந்த மழைத்தூறல்கள்!
பூமிக்கு போர்வை!
மண்ணின் கம்பளம்!
நிலத்துள் ஒளிந்திருக்கும் முயல்குட்டிகள்!
மரத்தின் குழந்தை!
மண்ணின் ஊதுவர்த்திப் பிரார்த்தனை!
வான்மரங்களுக்கு சவால்விடும் பிள்ளைப்பூச்சிகள்!
சமாதிகளில் சாமரம்!
எறும்புகளின் நிழல்தடாகம்!

## புருஷலட்சணம்

நெடுநேர
நெருடல்களின் பின்
ஒரு முடிவுக்கு
வந்திருக்கின்றேன்!

ஒருவன்!
யார் அவன்!
எவனோதான்!
அவனின்
சிரித்தே பழக்கப்படாத உதடுகள்
வெற்றிலையைக்
குதப்பிக் கொண்டிருந்தன!
தாடி விதானங்களில்
ஒழுகிக் கொண்டிருக்கும்
சாற்றை
அவனது புறங்கைகள்
துடைத்துக் கொண்டிருந்தன!

ஆம்,
அவனும்
இந்த உலகத்தில்
உயிருடன் தான்
இருக்கின்றான்!

வீட்டில் நிற்கும்
நேரம் தான்
தூய்மையாய் நிற்பான்
போலிருக்கிறது!

குளித்து விட்டு
அழுக்காடைகளுடனேயே
அவனது
இன்றைய நாள்
தொடங்கியிருக்கிறது!

நிறங்களின்
பெயர்களில் அடங்காத
ஒரு கலரில்
கட்டிய சாரம்
வெறும்
கோவணத்துண்டளவு
மானத்தை மறைக்க!

விளம்பரங்களில்
மகிழ்ச்சியுடன் காணப்படும்
முகங்களின் கீழ்
கால் மடித்து
உட்கார்ந்திருக்கிறது ..
அந்த ஜீவன்!

தேய்ந்த செருப்பு,
"ஒழுங்கற்ற நகங்கள் "
இயற்கையாகவே இறைவனின் நேசிப்பை
இழந்தவன்
என்று
உணர்த்தியது!

அவன் பிச்சைக்காரனல்ல!

தொழிலாளி!

அந்தத்திமிர் ஒட்டியே இருந்தது!

"கதைப்பதற்காகவே "

அந்த தொலைபேசி!

நிமிடம் பத்திற்கு ஒருமுறை

யாரையோ

அழைத்துக்கொண்டிருந்தது!

அது

இன்றைய நாளுக்கான

உணவுக்காக கூட இருக்கலாம்!

இந்த
மனித ஊன்று கோலில்
எத்தனை உயிர்களோ?
என்ற வினா
மனதை நசிக்க!
அவனைப் பார்த்து
கண்களால் கொஞ்சம்
சிரித்தேன்!

சிரிப்பறியா
அந்தக்கண்கள்
என்னை
அவமதித்து
அப்பால் பார்த்தது!
பாவம்
அது
அவனுக்கு
அனுபவம் தந்த
பாடமாகக் கூட இருக்கலாம்!

இன்னும்
ஊன்றிக்கவனிக்கிறேன்
அவன் பிச்சைக்காரனல்ல!
தொழிலாளி!
அந்தத்திமிர் ஒட்டியே இருந்தது!

# என் முகவரி - நம்பிக்கை

அடுப்பு சூடுகாணாததால்
நாடாத பூனைகளெல்லாம் - எனக்காக
இன்று அழத்துவங்கின,
கிளி நனைந்தால்
பருந்துக்கு என்ன மனக்குமுறல்?

தோற்கத்தானா ஜெனித்தோம்?
ஓ! மனித சமுதாயமே
தோல்விக் கிணற்றுள் புதையுண்ட
என்னை இரக்கக்கயிறு போட்டு
மீட்க நினைக்காதே!

அதே வேளை
விடுப்பு விழிகளால் என்னைப் பார்த்து
வீண் வார்த்தை பேசாதே!
எனக்காக ஏமலாந்தி
உனக்கான தேவதைகளை
கோட்டைவிடாதே!

உனக்கான வாயிலை நீ தேடு!
என்னோடு காலத்தைக்கழிக்காதே!
எனக்கான ஒற்றை வழிப்பாதையின்
கதவினை
நானே திறப்பேன்!
அல்லது
கண்டு பிடிப்பேன்!
என் கண்களில்
ஒளி இன்னும் சாகவே இல்லை!
துன்பச்சூறாவளியிலும்
என் வேகம் குறையவில்லை!
ஜென்மம் நிறைந்தாலும்
புதிதாய்
மரித்துப் பிறப்பேன்!
என்னோடு காலத்தைக்கழிக்காதே!

# கடவுளே

ஓ இறைவா!
என்னதானய்யா நடக்குது இங்க?

நீ நரகாசுரனை கொன்றாயாமே!
நான் என்ன நம்பவா போறன்?

தேவர் துயர் தீர்க்க
தேவகியிடம் பிறந்தாயாம்?
இதெல்லாம்
தேவையே இல்லாத கதை!

வலி சுமந்த தமிழர் வாழ்வு
வினைத்தொகையாய்த் தொடர
ஓ! நாராயணா?
திருப்பதியில் உன்
பணத்தொகையை
எண்ணுகிறாயோ?
இங்க கொஞ்சம் வா கடவுளே!
உனக்கு என்னதான் பிளான்?

ஒட்டுமொத்தமாய் எமை அழிப்பது தானென்றால்
ஒரே நாளில் அழித்துவிடேன்!
ஒரு வேளை
உருத்திரனுக்கும் உனக்கும்
சரித்திரம் சரித்திரமாய்
சண்டை ஏதும் தொடருதா?

நீ - நன்றி மறந்தவன்
உன் வைதீகங்களை
வளர்க்க நாங்கள் தேவைப்பட்டிருக்கிறோம்!
பல்லவர் காலம் முதல் - உன் "பவர்"
பறிபோகாமல்
நல்லமாதிரி எடுத்து வந்தது
நாங்களல்லோ? எங்களை நீ
வெல்லவும் விடவில்லை எதிர்த்து
ஏதும்
சொல்லவும் விடவில்லை!

மனசுமுழுக்க கனத்துடன்
ஏதோ எண்பதாவது திருமணநாள்க்கடந்த
தீபாவளியாய் வெறும்
சடங்காகவே கடந்து போகிறது
இந்த நாள்!

ஏதோ கம்சனை வென்றாய்
என்று
கதை கொஞ்சம் - கசிந்தது தான்!
நம்புற மாதிரி எனக்கில்லை!

பூமிப்பாரம் குறைக்க
உனக்கும் எமனுக்கும்
புதுசாய் - ஏதும் ஒப்பந்தம்
நடந்ததா?
எங்கள் வாழ்க்கையையும்
எங்கள் வளத்தையும்
மழுங்கடித்து விட்டு
எதுக்கடா முழுங்குகிறாய் சங்கை!

காத்தல் கடவுள் உன்னிடம்
கன "அப்பீல்" வழக்குகள்
நீ
கன்னியர் மப்பில் இருந்தால்
எப்படி
தீரும் பிணக்குகள்?
கடைசியாக கேக்கிறேன் ..
மரியாதையா
கல்கியாய் வரமுடியுமா? இல்லையா?

# நீ+நான்=ஏக்கம்

என்னவனே!
பட்டாம்பூச்சிகள்
பாரதம் கேட்பதாய்,
உனை நான் புரிந்து கொள்ள
முயல்கிறேன்!

உன் நெற்றி வழியும்
வியர்வையாய்
எனைத்துடைத்தெறிய
நினையாதே!

நீ
வெட்ட விழும்
ஒவ்வொரு நகங்களையும்
சேகரிக்கக்
காத்துக்கிடப்பவள் நான்!

உன்
இதழோர சிரிப்பில்
மறையும்
கவலைப்பற்களை
கவனித்துக்கொள்பவள் நான்!

என்ன செய்ய
நாளொன்றிற்கு
1440 நிமிடங்கள் மட்டுமே
உனை நினைக்க முடிகிறது!

ஒரே மரச்சுவாசத்தை
நீயும் நானும் நுகர்ந்து கொண்டிருக்கையில்
கானமிசைப்பதை விட
மரத்துக்கு வேறென்ன வேலை
இருந்து விடபோகிறது?

பழங்கள் கொடுப்பது
பரிசம் போடும் போது தானாமே!
நீ
ஸ்பரிசித்து தந்த பழங்களெல்லாம்
விதையூறி
என்னுள்
பூக்களாய் மலர்ந்து கிடப்பதை
நீ எங்கே
அறியப்போகிறாய்

மறுபடியும்
உன் நெற்றி வழியும்
வியர்வையாய்
எனைத்துடைத்தெறிய
நினையாதே!

## ஓசைக்கவி

அதிசயம் எதுவுமே
நடந்து விடப்போவதில்லை;
கனவுகள் யாவற்றையும்
தூரவிரட்டும்
தூக்கக்கலைவு போல.
என்னைப்புரட்டிப்போட்டு
சம்பவமாக்கியது
வாழ்க்கை!

கவிதைக்கு பொருத்தமே இன்றி
எதுகை மோனைக்காய் மட்டும்
வந்து சேரும்
எழுத்துக்கோர்க்கையாய்
தேவையே இல்லாமல்
என்னோடு இணைந்தவர்கள் தான்
கோடி!

என் வீட்டு
குப்பைத்தொட்டிக்குள்
பழைய கவிதையை
எறியவே
ஒருதடவைக்கு இருதடவை
யோசிக்கும் என்னை
குப்பைத் தொட்டிகளுக்கெல்லாம்
தலைமைத் தொட்டிக்குள்
தூக்கி எறிந்து விட்டது
சமூகம்!

இனியும் அதிசயங்கள் எதுவும்
எனக்கு நடந்து விடப்போவதில்லை

தன்னம்பிக்கையற்ற கடவுள்
தன்னை
நாத்திகவாதி என்று நிரூபிப்பதாய்
என்
ஆதாரத்தையே அசைத்துப்பார்க்கும்
விதிக்குரல்கள்!

ஏதோ ஒன்று
என்னைத்தாண்டியும்
நடந்து கொண்டுதான் இருக்கின்றது.
இருந்த போதும்
அது
எந்த வித அதிசயங்களையும்
தோற்றுவிப்பதற்கான
அறிகுறி அல்ல!

சுமையின் பிறாண்டல்கள் அதிகரிக்கத்தான்
சுவையான வரிகளின்
தீண்டுதல்கள்
ஆரம்பிக்கின்றன!

கவிதை எழுதத்தானும் நான்
இனிமேல்
கவலையாகவே இருக்கப்போகின்றேன்!

## காதல்க்கணக்கு

உன் வாழ்க்கைக்கான கணக்கில்
வெற்றிகளின் அமையச்செலவாக
என்னை நினைக்கிறாய்!
இன்னும்
நம்பிரிவு தொங்கலாய்த்தொடர,
தொலைந்து பிறக்கின்றேன்!

காதல் இலாபத்தில் நாம் திளைத்த காலங்கள்
கண்ணெதிரே கரைய,
நன்மதிப்பு இழந்து,
பெறுமானம் தேய்ந்து,
இப்போது நட்டத்தில்
நான் மட்டும் நனைய
எங்கே போனாய்?

காதலை விளம்பி விளம்பியே
கணக்குகளைச்சரி செய்தவன் நீ!

தனியே சமனிக்கத்
தவிக்கும்
ஐந்தொகை நான்,
சரி செய்ய
எப்போது வருவாய்
என்
கணக்காளனே!?

# காலை மகிழ்தல்

விண்மீன்களை விழுங்கி
ஏப்பமிட்ட வானம்
பறவைகளுக்காக கொஞ்சம்
பள்ளியெழுச்சி பாடிமுடித்திருந்தது!

கலைந்து விட்ட நேற்றைய மேகங்களை
மும்முரமாய் தேட
ஆரம்பித்தது நிலவு!

இருளை விரட்டிய கோபத்தில்
சிவந்தது கீழ் வானம்!

கையசைக்கும் மரங்களோடு
கை குலுக்கியது
தென்றல்!

மொட்டிதழ்களுக்கான
ஒட்டிய பிசிர்களை
களையத்துவங்கியது
சூரியக்கதிர்!

# கூடுபாய்தல்

நீ
சுவைத்து முடித்து
தேநீர்க்கோப்பையை தூர வைத்துக்கொண்ட
வேளை,மலர்க்கோப்பைக்குள்
இருந்து
வண்டு வெளியே
பறந்து கொண்டிருந்தது!

உன் விரல்களின்
வருடல்களில்
தன் உடல் சூட்டை
உன்னுள்
ஊற்றி
குளிர்ந்தே விடுகிறது
கோப்பை!

அதன்
வாய் விளிம்பில்
உன் உதடுபட்டதும்
அது
கொஞ்சம் நாணத்துடன்
உன்னை உறிஞ்சிக்கொள்கிறது!
உனக்காகவே
வடிக்கப்பட்ட கோப்பை
பிறர் தொட முயல்கையில்
விழுந்து
உடைந்து
தற்கொலை பண்ணவும்
அது
துணிந்து விட்டது!

நீ சோர்ந்து
மடிந்து போகின்ற பொழுதுகளில்
தன்
உயிரைக்குடிக்க
அது
அனுமதியளிக்கிறது!

குளிர்கால கூதல்களில்
உன் நடுக்கங்களோடு
கைகளுக்குள் சிக்கி
அதுவும்
துடித்துக் கொள்கிறது!

உடைந்து போய்விடுமென
அறிந்தும்
உன்
காரசார வை(த்)தல்களை
அது
பொறுத்துத்தன்
மேனி காக்கின்றது!

உனக்கென்ன
இது உடைந்தால்
நீ
புதிதாய் ஒன்றை வாங்கிவிடப்போகிறாய்!

பேதைக் கோப்பை
இதையறியாமல்
உன் மீதான எதிர்பார்ப்பை
வளர்த்துக் கொண்டேபோகிறது!

நீயோ
சுவைத்து முடித்துவிட்டு
தேநீர்க்கோப்பையை கொஞ்சம்
தூரமாகவே வைக்கின்றாய்!

## நட்பிலக்கணம்

உண்மையில் எனக்குப் பிடிக்கவில்லை,
அனுமதியுடன் கூடிய
வார்த்தைப்பிரயோகம்!

என் வாழ்வை நீங்கள் தீர்மானியுங்கள்!
வாழ்ந்து பார்க்க நான் தயாராக
இருக்கிறேன்!
நீங்கள் உரிமையை உயரவைத்து
உணர்ச்சியை தூரவைத்தே
பழகுகிறீர்கள்!

என்னிடம்
உங்களுக்கான உதவிகள்
காய்த்துக்கிடக்கின்றன.
அன்புடன் தூக்கி நான் தரத்தேவையில்லை!
உரிமையுடன் பிடுங்கிக்கொள்ளுங்கள்!

உங்களை நானாகவே
நினைத்துக் கொள்கையில்
" நன்றி " " மன்னிப்பு " எனும்
அகராதிச் சொற்களுடனேயே
அநேக உரையாடல்களை தொடங்குகிறீர்கள்!
அது உங்களுக்கும் எனக்குமான
ஏற்ற இறக்கங்களுக்கான
கட்டுமானப்பணி!
உண்மையில்
எனக்குப் பிடிக்கவில்லை!

ஆழமாக மௌனித்திருக்கும்
என் உள்ளச் சமுத்திரத்தில் சலசலப்பை
உருவாக்க நானே
கூழாங்கற்களைப் பொறுக்கித்தந்தேன்.

நீங்கள் என்னை
மௌனித்த போதிதர்மராகவே
பார்த்துவிட்டுப் போகிறீர்கள்!

உங்கள் தவறுகளைக் கொல்ல
நானே ஆயுதமாக தயாராகிய போது
கொடுவிட நஞ்சு என்று
நெடுந்தூரம் பயணிக்கிறீர்கள்!
நீங்கள் நினைப்பது இரண்டும் தவறு!

உங்களின் தனிமைக்கு
என் தனிமையை
மிகைநிரப்பி ஆக்கிவிட்டவள் நான்!
ஆனால்
அறிவுபூர்வமான கவிதைக்கு
உணர்வுக்குவியலாய்
வந்து சேரும் சொற்கள் போலவே
என்னைப் புறக்கணித்து விடுகிறீர்கள்!

உங்களிடம் ஒரு விநோத வாய் மிஷின்
இருக்கிறது
அது தேவையே இல்லாவற்றிற்குத் திறந்து
தேவைப்படும் முக்கிய கணங்களில்
மூடிக்கொள்கிறது!

எனை நீங்கள் புரிய வேண்டும் என
பிரியப்படவில்லை.
அது வாயிலில் விளக்கைக்கொழுத்திவிட்டு
வராந்தாவில் எதையோ தேடுவது போல
இயலாத காரியம்!
ஆனால்
நீங்கள் புரிந்து பிரிந்து சென்ற அளவிற்கு
கொடூரக்குணங்களின்
கூடாரமல்ல நான்!
உங்கள் அனைவரிலும்
அன்பு செலுத்துமளவு
பாசச்சுரங்கங்கங்களை
இணைத்தே அவன் அனுப்பியிருக்கிறான்

நீங்கள் புரிந்து பிரிந்து சென்ற அளவிற்கு
கொடூரக்குணங்களின்
கூடாரமல்லவே நான்!

# வெட்கம் அறிதல்

என் வெட்கமொட்டுக்கள்
உன் பார்வை ஸ்பரிசம்பட்டு
கட்டவிழ்ந்த காலத்தை
இப்போது நினைக்க
வெட்கமாயிருக்கிறது!

புங்குடுதீவுச் சீதைகள்
காமத்தீயில் கருகிய போது,
என் விரல்
காதல் பிடிலை வாசித்துக்கொண்டிருந்தது!
கேவலம்
அவளுக்காக
கவிதைக்காணிக்கையைக்கூட
வைக்கமாட்டாமல்
காதல் கோரிக்கையை
உன்னிடம் நீட்டிக்கொண்டிருந்தேன்!
ஆம்,வெட்கப்படுகிறேன்!

என் தொப்புள்கொடி உறவுகள்
தம் கனிகளையும் பூக்களையும்
உதிர்ந்த சருகுகளில் தேடிக்கொண்டிருக்க,
ஊரில் நடந்த
களியாட்ட திருவிழாக்களில்
என் கண்கள்
உனக்காக தவித்துக்கொண்டிருந்தன!

ஆம்,வெட்கப்படுகிறேன்!

ஊர்க்குருவிகளெல்லாம்
உலகக்கழுகிடம்
இலங்கைக்குஞ்சை
இரையாக்குமாறு
மன்றாட்டமாய் நிற்க,
நான் மட்டும்
நீ ஏன் என்ன விட்டுப்போனாய்
என்ற
திண்டாட்டத்தில்
திணறிக்கொண்டிருந்தேன்!

ஆம்.வெட்கப்படுகிறேன்!

ஆசை வெட்கமறியாதுதான்!

அறிந்திருந்தால்,

எழுத்தாயுதம் கொண்டாவது இவற்றையெல்லாம்

எதிர்த்து நின்றிருப்பேன்!

## புகப்போர்

உனக்கான தேடலில்
தொலைந்த என்னை
தொலைந்துபோ என்கிறாய்!

தென்றலிலும்
உன்வாசமுணரும்
என் மன அனைத்து
சிறகைப்பிய்த்தெறிந்து
ஏன் கசாப்புக்கடைக்கு அனுப்புகிறாய்?

இமையோரம்
கசியும் காதலில்
வெறும் உப்புக்களைத்தான்
பரிசோதித்துப்பார்க்கிறாய்!

காதல் காட்டில்
துள்ளித்திரியும்
என் பிஞ்சு நெஞ்சை
கட்டாயப்படுத்தி
பள்ளிக்குத்துரத்துகிறாய்?

புரியாத புதிருனக்கு
விடையாக வந்தேன்
நீ
பரீட்சையை எதிர்த்து
பேரணி நடத்துகின்றாய்?
என்ன செய்ய?
நீ என்னை புரியப்போவதும்
நான் உன்னை பிரியப்போவதும்
இல்லை!

# போதிமரவிறகு

என்னுடைய போதிமரங்கள் விறகாகின்றன,
நெருப்பு என் நெஞ்சுக்குள்!

என் கண்களுக்குள்
கண்ணீரைக் கொட்டிவிட்டது யார்?

என்னுடைய தலைமுடி ஏன்
சீப்புடன் சினேகம் செய்கிறது?

என் நகங்களையும் தசைகளையும்
எதிர் எதிர் கட்சியாக்கிவிட்டது யார்?
எப்போதும்
என் மேலுதடு கீழுதட்டை நச்சரிக்கிறதே?
ஏன்?
கடவுளே பதில் இல்லையா?
ஓ
இவற்றின் வரிசையில் நீயும்
இணைந்து கொண்டாயோ?

# பொந்திடை வைத்திட்ட

ஆங்கவன்
பொந்திடை வைத்திட்ட
பொக்கிஷக்குஞ்சுகள் -இன்னும்
பொய்த்துப்போய்விடவில்லை!

அவிந்தே போய்விட்டன என்ற
அலர்தூற்றல்களை
அடித்துவிரட்ட
பொங்கிவெடித்தன- புதுயுகம் படைத்தன
எரிமலைகள்!

வீரமறவர்- மரபுகாக்க
வீறுகொண்டன காளைகள்
சட்டத்தையும் சதித்திட்டத்தையும்
சருகாக்கிட குதித்தன சாலையில்!

தம் வேர்கள்
திருடப்படுவதை உணர்ந்த
காய்களும்
கனிகளும்
பூக்களும் பிஞ்சுகளும்
சேர்ந்துதானே
போர்க்கொடி தூக்கின!

யுகம் கடந்த வீரத்துக்கு ஏது தடை?
தடையதை புடைபெயர்த்து
மெரினா அலைகள்
வீரநுரைகளையல்லவா
தோற்றுவித்துக்கொண்டிருந்தன!

பருந்தது கௌவும்
தன் பாசச்செல்வங்களை-கோழி
வருந்தித்தான் பார்த்திடுமா? இல்லை
வானுயரச் சென்று தாக்கிடுமா?

கடவுள் எப்படி
நாத்திகவாதியாகிவிட முடியும்?
அவ்வாறே
தமிழனும் மானமும் அவன் வீரமும்!

ஆங்கவன்
பொந்திடை வைத்திட்ட
பொக்கிஷக்குஞ்சுகள் -இனியும்
பொய்த்துத்தான் போய்விடுமோ?

(ஜல்லிக்கட்டுப்போராட்ட வெற்றியைக்கொண்டாடும் முகமாக 2018 தை மாதம்,
திருச்சிராப்பள்ளி , அனைத்துலகத்தமிழ்மாமன்றத்தால்
வெளியிடப்பட்ட நூலில் இடம்பெற்ற கவிதை)

# தேடி?

அதற்கு ஏதோ ஒன்று தேவைப்படுகிறது..
ஓய்வு,
உறக்கம்,
அறிவு,
அன்பு,
தொடுகை,
ஸ்பரிசம்,
உணவு,
பாதுகாப்பு,
இன்னுமின்னும்,
அனுமான் வாலாய் ..
அது நடக்கிறது,
ஓடுகிறது,
பாய்கிறது,
படுக்கிறது,
எதற்காக?

எது சொல்லி அது இவ்வாறு செய்கிறது?

நான் கவனிக்கிறேன்!
எல்லோருக்கும் அது கிடைத்துத்தான் இருக்கிறது!

அதுதான் பெரியது!
அதுதானே தீர்மானிக்கிறது நம்மை!
நம் பரம்பரையை
குணத்தை!
அது தான் பெரியது உலகில்!

அது கருவி,
அது செயல்,
அது தான் மெய்,
அது சிரிக்கிறது!
அழுகிறது!
அதை யார் தாக்குவது!?

ஆம்,
அதற்கு எதுவோ தேவைப்படுகிறது!

## ஞானதரிசனம்

வாய் இழந்து போன மனது
பதிலுக்காகத் துடித்துக் கொண்டிருக்கின்றது!

உலகை விட்டுத்தப்ப நினைத்தும்
பாதங்களைப் பிடித்து இழுக்கின்றன
பற்றுக்கள்!

அமைதியாகவே போன உதடு!
மரித்தே போன இதயம்!
காய்ந்து போன கண்!
கவனியாத உறவு!

கடவுள் தனக்கான
அந்தஸ்தை இழந்து
நெடுநேரமாகி விட்டது!

சின்ன சப்தங்கள் என் காதில்
பீரங்கிகளாய் முழங்கிக்கொண்டு இருக்கின்றன!

கவிஞர்கள் மன நோயாளிகளாகத்தான்
இருக்க வேண்டும்!
முற்றுமுழுதான உண்மை!

மயிலேறி வார்த்தை தேடிப்புறப்பட்ட
புத்தி வெறுங்கைகளுடனேயே
கவிதைகளைச் சந்தித்துக்கொள்கின்றன!

குனிந்த தலையும்
பனித்த கண்ணும் தான்
மனிதத்திற்கு முழுச் சொந்தக்காரர்கள்!

பிரச்சினைகளே ராஜாக்கள்!
கவிதைகள் கைமுளைத்துத்தொழுதாலும்
இரங்காத மனசு!
அவர்கள்
என் மொழிகளையும்
கவிதைப் பத்திரங்களையும் செல்லாத
பக்கங்களாக அறிவித்து விட்டனர்!

பிரச்சினைகளே சர்வாதிகாரிகள்!
கடுஞ்சிறையில் என்னை
நெடுநாளாய்க் காவல் வைத்து விட்டனர்!

அந்தரிக்கும் மனசு
அடிக்கடி பெருமூச்சு!
புரிந்து கொள்ளாத உறவு!

கவிஞர்கள் மன நோயாளிகள் தான்!
கனவில் துள்ளித்திரியும் அவர்கள்
நிஜத்தின் ஆயுதப்போராட்டத்தில்
தேவையின்றிக் கற்பழிக்கப்படுகிறார்கள்!

கவிதை என்பது வேறு
வாழ்க்கை என்பது வேறு!

தூரத்தில் கேட்கும் தாயின் வறட்டு இருமல்!
துவண்டு கிடக்கும் தந்தையின்
மனக்குமுறல்!
ஆபத்துக்கு உதவா நட்பு!
அவசரத்தில் கைவிடும் உறவு!
மொட்டைமாடியிலிருந்து தவறுதலாய்
விழுபவன் கிணற்றுக்குள் புதைவது
போல
என்னிடம் வா!
மார்புக்குள் ஒளிந்து கொள்!
என கஷ்டங்கள்
அணைத்துக் கொல்கின்றன!
கன்னம் வருடி அன்பு முத்தம் தருகின்றன!

புனிதமான அன்பு!
மரியாதை!
பொறுமை!
பயபக்தி!

இவைகள் பிரச்சினையின் ஆட்சியில்
சட்டவிரோதப் பொருட்கள்!
இது புரியாத கவிஞர்கள்
இன்னும் அவற்றைப் பத்திரப்படுத்தி தாம்
செல்லுமிடமெல்லாம் கொண்டு திரிகிறார்கள்!

உண்மையில் கவிஞர்கள் மன
நோயாளிகள் தான்!
பதில் கிடைத்ததும் மனத்தின்
அந்தரிப்பு அடங்கிப் போய் விட்டது!

- கவி முற்றிற்று -

முகமிழந்த பொழுதுகளில் என் மௌனத்தை
உரிமையுடன் கலைத்துக்கொள்வதற்கு எந்தவொரு
நொண்டிச்சாட்டுக்களும் உள்நுழைவதில்லை.
வாழ்க்கை தனக்குத்தானே போட்டுக்கொள்கின்ற
விலங்குச்சிறைகளில் அடைபட்ட கைதியாகி
பதிலேதுமில்லாத கேள்விகளுடன் சிக்கித்தவிக்கின்ற
நிமிடங்கள் பொல்லாதவை.
இளமை கொஞ்சம் கொஞ்சமாய்க்கரைகின்ற
வேளைகளை என்னால் ஜீரணித்துக்கொள்ள
முடியவில்லை.
எது தேவை? எவை உண்மை? என்பதைக்
கண்டறியாமலே வாழப்பட்ட ஒரு புத்தகமாய் என் ஆயுள்
தோன்ற இன்னுமின்னும் குறுகிப்போகின்றேன்.
தவறானவை என நான் ஒதுக்கிய சரியானவையும்,
சரியானவை என நான் நெருங்கிய தவறானவையும்
என்னைப்பார்த்துக்கை கொட்டிநகைக்கின்றன!
தெரிந்தே செய்தவற்றை தெரியாமல் செய்துவிட்டேன்,
என்று கூறிய பொய்கள் கூரிய நகம் கொண்டு
என்நெஞ்சில் சித்திரம் கீறிச்சிரிக்கின்றன.
எனக்கு நானே திண்ணம்! என்பதைப்புரிந்து
கொள்கிறேன்.என்னிடமிருந்து விலகியவையின்
நியாயமான காரணமும் என்னோடு இணைந்தவையின்
அநியாயப் பயன்படுத்துகையும் இப்போதுதான்
எனக்குத்தெரிகிறது.அறிவைத்தேடும் என் பயணம்
பரந்து கிடக்கும் நெருஞ்சி முட்கோர்க்கைகளோடு
தொடர்கின்றது.இன்னும் தொடரும்!
மரணம் என்னைத்தொடுமட்டும்!

**அம்பிகை.ப**



# *கவிஞர் பற்றிய சில வரிகள்...*

ஒரு பானை சோற்றிற்கு ஒருசோறு பதம் என்பதற்கிணங்க எதிர்காலத்தமிழினம் தமிழுணர்வு மங்கிடாமல் துலங்கும் எனும் நம்பிக்கையை இந்நூலின்வாயிலாக கவிதாயினி, இலக்கிய உலகின் இளந்தளிர் அம்பிகை பஞ்சலிங்கம் நிரூபித்துள்ளார். இவரின் எழுத்தாற்றலும் எடுத்தியம்பும் அறிவியல் ஆற்றலும், இலட்சிய நோக்குடையதாகவும் இலக்கிய வளம் நிறைந்ததாகவும் இருக்கின்றன. எடுத்தகாரியம் யாவிலும் வெற்றிகண்டு ஏற்றம் பெறுவார் என்பதில் ஐயமில்லை. எம் தாயகத்தின் எதிர்காலச்சந்ததியினரும் தமிழுணர்வு மிக்கவர்களாய் வாழ்வார்கள் என்ற நம்பிக்கையை இவரது கவிதைகள் ஊட்டுகின்றன. எங்கும் தமிழ் ஒலிக்கவும் மங்கையர்க்கரசியின் கவிதைகள் பொங்கியெழவும் என் வாழ்த்துக்கள்.

**முனைவர்.மருத்துவக்கலாநிதி,**
**வே.த.யோகநாதன்,**
தலைவர்,
அனைத்துலகத்தமிழ் மாமன்றம்,
தமிழ்நாடு,தென்னிந்தியா.

9 789553 894403

சாயி பிறிண்டேர்ஸ் - 077 2209474